செ.வெ.எண்:72 நாள்:30.12.2017

பத்திரிக்கை செய்தி

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் திருநெல்வேலியில் புத்தகத் திருவிழா நடத்துவது தொடர்பான முன்னேற்பாடுகள் ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (30.12.2017) நடைபெற்றது.

கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது:-

திருநெல்வேலியில் புத்தகத் திருவிழா நடத்திட தேவையான முன்னேற்பாடுகளை செய்திட வேண்டும். புத்தகத் திருவிழா பிப்ரவரி மாதம் நடத்தும் வகையில் ஏற்பாடுகளை செய்ய வேண்டும். புத்தகத் திருவிழாவிற்கு வருகை தரும் பொதுமக்களுக்கு தேவையான கழிப்பிட வசதி போக்குவரத்து வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகளை செய்திட வேண்டும். புத்தகத் திருவிழாவிற்கு அதிக அளவிலான மக்கள் வருகை தரும் வகையில் விளம்பரப்படுத்த வேண்டும். பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களைக் கொண்டு தினசரி கலைநிகழ்ச்சிகள் நடத்திட ஏற்பாடு செய்திட வேண்டும். புத்தகம் வாங்கும் ஆர்வத்தை அதிகரிக்கும் வகையிலும், இளைஞர்கள் புத்தகம் வாசிக்கும் ஆர்வத்தை அதிகரிக்கும் வகையிலும் சிறப்பாக நடத்திட சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களும், ஒருங்கிணைப்பாளர்களும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். எனப் பேசினார்.

இக்கூட்டத்தில் உதவி ஆட்சியர் பயிற்ச்சி திரு.இளம்பகவத்,இ.ஆ.ப., முதன்மை கல்வி அலுவலர் திருமதி.முருகானந்தம், மாநகராட்சி ஆணையர் (பொ) திரு.நாராயணநாயர், தேசிய புத்தக நிலையம் திட்ட அலுவலர் திரு.மதன்ராஜ், மாநகராட்சி உதவி ஆணையர் திரு.பாஸ்கர், மாவட்ட நூலக அலுவலர் திரு.ரமேஷ்ராஜா, திருநெல்வேலி நூலகர் திரு.முத்துகிருஷ்ணன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.